# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 07.04.2026**

**முன்னிலை**

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 2784/F/2024**

திரு.A.ராமு .. புகார்தாரர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்,
கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்),
காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606202. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 07.04.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.A.ராமு அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக திரு.V.விநாயகமுருகன், காவல் ஆய்வாளர், கச்சிராயப்பாளையம் காவல் நிலையம், கள்ளக்குறிச்சி அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 06/05/2024 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் தான் கடந்த 16.10.2023 தேதியில் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு பதிவஞ்சலில் அனுப்பிய புகாரின் மீது இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் காட்டும் ஆவணங்களின் ஒளிநகல்கள் என்பன போன்ற 4 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 08.05.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இந்நிலையில் மனுதாரர் தனக்கு சரியான தகவல் கிடைக்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம், பிரிவு 18(1)ன் கீழ் 07.06.2024 நாளிட்ட புகார் மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.04.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத்தகவல் அலுவலரின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 28.05.2024 மற்றும் 16.07.2024 தேதியிட்ட கடிதங்கள் மூலம் தகவல் வழங்கப்பட்டிருப்பதாக கூறி ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் ஏற்புடையது அல்ல என இவ்வாணையம் கருதி கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.

- **மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)ன் கீழான மனுவில் குறிப்பிட்டுள்ள 16.10.2023 நாளிட்ட கள்ளக்குறிச்சி மாவட்ட கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகார் மனு சம்மந்தமாக தகவல் கோரியதற்கு அப்போதைய பொதுதகவல் அலுவலர் / கூடுதல் காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், கள்ளக்குறிச்சி அவர்கள் 28.05.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட தகவலும் தற்போதைய பொதுதகவல் அலுவலர் / கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நாளிடப்படாத கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள தகவலும் இன்றைய விசாரணையில் பரிசீலனை செய்கையில் அப்போதைய பொதுதகவல் அலுவலர் திரு.மணிகண்டன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், கள்ளக்குறிச்சி அவர்கள் மனுதாரருக்கு ஆவணங்கள் அடிப்படையில் உரிய தகவல் வழங்காததால் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005, சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ.25000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூல விளக்கத்தினை 12.05.2026 அன்று திரு.மணிகண்டன், அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் / கூடுதல் காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், கள்ளக்குறிச்சி, அவர்கள் இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 2784/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்,
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
(தலைமையிடம்),
காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606202.

**<u>திரு.மணிகண்டன்,</u>**
**<u>(அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்)</u>**
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
(தலைமையிடம்),
காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606202.
**<u>(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)</u>**

**<u>புகார்தாரர்</u>**
திரு.A.ராமு.
2/432, சூசை நகர் கிழக்கு,
கரடிசித்தூர் அஞ்சல்,
சின்னசேலம் வட்டம்,
கள்ளக்குறிச்சி-606207.

Copy to file: KR/PA